**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

Calendar :
Miscellaneous :
Preliminary register :
Sessions :

Sessions Case No.58 of 2020

Deposition of witness for :
Prosecution : PW- 3
Defence :
Court :

Name : Mariyappan

Father's Name :

Village :

Taluk :

Calling :

Religion :

Age :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18th day of October 2022.**

முதல் விசாரணை:

நான் அனுமந்தீர்தத்தில் குடிறிருந்து வருகிறேன். நான் காட்டேரி கிராம தலைவராக 2011ம் ஆண்டு முதல் 2016 வரை செயல்பட்டேன். நான் பழக்கமாக இருந்தபோது கோவிந்தராஜ், இளையராஜா, அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோர்கள் எனக்கு பழக்கம். கடந்த 15.12.2018 அன்று இரவு சுமார் 10.15 மணியளவில் அ.சா.1 என்னை போனில் அழைத்தார். அவர் அழைத்து என்னிடம் தானும், அ.சா.2ம் இருசக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தபோது விந்தியா மந்தீர் பி.எட் கல்லூரி அருகே அடையாளம் தெரியாத நபர்கள் அவர்களை காட்டி வையின் சாப் வசூல் செய்த தொகையை எடுத்துச்சென்றுவிட்டதாகவும் ஆட்களை அழைத்து வரும்படியும் சொன்னார். நான் மணி என்பவரை அழைத்தேன் அவர் ஊரில் இல்லை என சொன்னார். அதனால் நான் மட்டும் கிளம்பி வந்தேன். நான் வந்தபோது வித்தியா மந்தீர் கல்லூரியில் வேலை பார்க்கும் 3 காவலர்கள் இருந்தனர். அவர்களில் இளையப்பன் என்பவர் எனக்கு அறிமுகமானவர். அவரிடம் நான் விசாரித்தபோது ஆனந்தன் கல்லூரிக்குள் இருப்பதாகவும் முருகன் எங்குள்ளார் என்ற விரம் தனக்கு தெரியவில்லை என்று கூறினார். நான் முருகனுக்கு அவரது அலைப்பேசியில் அழைத்தபோது தான் செடி புதரில் மறைந்திருப்பதாகவும் நான் வந்ததை பார்த்தாகவும் தான் வருகிறேன் என்று சொல்லி சிறிது நிமிடக்ளிலே அவர் வந்தார். நான் ஆனந்தனிடம்ம முருகனை அழைத்துக்கொண்டு சென்றபோது ஆன்புலன்ஸ் வந்தது நான் ஆம்புலன்ஸில் அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகியோரை அழைத்துக்கொண்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமணைக்கு வந்தேன். நான் இளையராஜாவிற்கு போன் மலம் அ.சா.1 மற்றம் 2 ஐ துப்பாக்கியால் சுட்டுவிட்டதாகவும் அவர்களை மருத்துவமணைக்கு அழைத்து செல்வதாக தகவல் தெரிவித்தேன். ஊத்தங்கரை அரசு மருத்துவமணைக்கு நாங்கள் வந்தபோது இளையராஜா மற்றும் மதுக்கடை கண்காணிப்பாளர் சிவக்குமார் ஆகியோரும் வந்துவிட்டனர். பின்பு அ.சா.1 மற்றும் 2 ஊத்தங்கரை அரசு மருத்துமணையில் தருமபுரி அரசு மருத்துவமணைக்கு அழைத்து செல்லுமாறு பரிந்துரை செய்தனர். நானும், அ.சா.1, 2, இளையராஜா, சிவக்குமார் ஆகியோர் தருமபுரி அரசு மருத்துவமணைக்கு சென்றோம். தருமபுரி அரசு மருத்துவமணையில் ஊத்தங்கரை போலீசார் அதிகாலை சுமார் 1 மணியளவில் வந்தனர். ஆனந்தன் மயக்க நிலையில் இருந்ததால் அ.சா.1 முருகன் வாக்குமூலம் அளித்தார். ஆனந்தனுக்கு அதிகமாக காயங்கள் இருந்ததால் அவரை சேலம் அரசு மருத்துவமணைக்கு அழைத்து செல்லுமாறு கூறினார்கள். நான் தருமபுரி அரசு மருத்துவமணையிலிருந்து திரும்ப வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் ஆனந்தனை பார்த்தபோது அவருக்கு வலது அல்லையில் காயங்கள் இருந்தது. முருகனுக்கு வலது காதில் காயமிருந்தது போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை 1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில்:

வித்தியா மந்தீர் கல்லூரியிலிருந்து எனது வீடு சுமார் 1.5 கி.மீ இருக்கும். அரசு மதுபானக்கடை இரவு 10 மணிக்கு மூடிவிடுவார்கள். கடை மூடிய பிறகு கணக்கு வழக்குகள் பார்த்து கிளம்புவதற்கு சுமார் அரை மணி நேரமாகுமா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. எனக்கு தகவல் தெரிவித்து நான் 5 நிமிடத்தில் கல்லூரி அருகே வந்துவிட்டேன். இளையராஜாவை நான் தான் போனில் அழைத்தேன். இளையராஜா ஊத்தங்கரை அரசு மருத்துவமணைக்கு தான் வந்தார். சம்பவ இடத்திற்கு அவர் வரவில்லை. 108 ஆம்புலன்ஸ் வாகனத்தை நான் அழைக்கவில்லை விந்தியா மந்திரி கல்லூரி காவலர் அழைத்துள்ளார். ஊத்தங்கரை அரசு மரத்துவமணையில் அ.சா.1 மற்றும் 2 சுமார் அரை மணி நேரமிருந்தனர். அந்த அரை மணி நேரம் நான், இளையராஜா, சிவக்குமார் ஆகியோர் அங்கு தான் இருந்தோம். நாங்கள் அனைவரும் ஒன்றாக ஒரே

ஆன்புலன்ஸில் தான் தருமபுரி அரசு மருத்துவமணைக்கு சென்றோம். போலீசார் விசாரணையில் மேற்படி சங்கதியை குறிப்பிட்டு கூறினேனா என்றால் கூறியுள்ளேன். ஆனால் போலீசார் பதிவு செய்தார்களா என்று எனக்கு தெரியாது. ஆனந்தனை ஊத்தங்கரை அரசு மருத்துவமணையில் பரிசோதித்தபோது அவரது சட்டை பனியன் ஆகியவற்றை களற்றி மருத்துவர்கள் பரிசோதித்தார்கள் பின்பு மேல் உடம்பில் துணி எதுவும் இல்லாமல் தான் தருமபுரி அரசு மருத்துவமணைக்கு சென்றால் என்றால் சரிதான். ஆனந்தனுக்கு வலது அல்லையில் காயம் ஏற்பட்ட விவரம் எனக்கு தெரியும் ஆனால் எத்தனை காயமென்று எனக்கு தெரியாது. அந்த காயத்திற்கு அவருக்கு கட்டு போடப்பட்டது. போலீசாருக்கு யார் தகவல் தெரிவித்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் தகவல் தெரிவிக்கவில்லை. நாங்கள் தருமபுரி அரசு மருத்துவமணைக்கு 12.30 மணிக்கு சென்றோம். போலீசார் அங்கு 1.00 மணிக்கு வந்தனர். ஊத்தங்கரை அரசு மருத்துவமணையிலேயே போலீசார் வந்துவிட்டனர். தருமபுரி அரசு மருத்துவமணையில் ஆனந்தன் மயக்க சிலையில் எவ்வளவு நாட்கள் இருந்தார் என்று எனக்கு தெரியாது. நான் தருமவுரி அரசு மருத்துவமணையில் இருக்கும் வரையில் போலீசார் வந்தபோதும் ஆனந்தன் மயக்க நிலையல் இருந்தார் என்றால் சரிதான். போலீசாஙர் அ.சா.1 ஐ விசாரித்து தான் வாக்குமூலம் பதிவு செய்தனர். அ.சா.2 ஆனந்தனை தருமபுரி அரசு மருத்துவமணையில் போலீசார் சவிசாரிக்கவில்லை. என்னை போலீசார் மறுநாள் காலை காவல் நிலையம் வரவழைத்து விசாரணை செய்தார். காவல் நிலையத்திற்கு நான் மட்டும் தான் சென்றேன். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் பகுதி இருட்டான பகுதி என்றால் சரிதான்.

<u>குறுக்கு விசாரணை **3** எதிரி தரப்பில்**:**</u>

மேற்படி 1, 2 எதிரிகளின் குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>மறுவிசாரணை**:**</u> இல்லை

**ஒம்/-**

**திரு.எம்.அஷ்பாக் அஹமத், பி.ஏ.,பி.எல்.,**
**உதவி அமர்வு நீதிபதி,**
**ஊத்தங்கரை.**